

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் கூடப்பாக்கம் கிளைச் செயலாளர் ஜி.பி.வி.நாகராஜ் தகப்பனாரும் முன்னாள் ஒன்றிய பிரதிநிதி மறைந்த ஜி. பி.வெங்கடேசன்(எ) டேவிட் திருவுருவ படம் திறப்பு நிகழ்வு ஒன்றிய செயலாளர் டி.தேசிங்கு தலைமையில் மாவட்ட பிரதிநிதி கூடப்பாக்கம் ப.கந்தன், முன்னிலை நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, நிர்வாகிகள் சி.ஜெரால்டு, மேயர் உதயகுமார், சன்.பிரகாஷ், பரமேஸ்வரி கந்தன், ஜி.சுகுமாரன், ஜி.பிரவின் குமார், வெள்வேடு கே.கோபிநாத், தனசேகரன், திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

சமூகநீதி பாதிக்கப்படும் - நிர்வாகமும் சீர்குலையும் - இளைஞர்கள் மத்தியில் போராட்ட உணர்வையும் தூண்டும், எச்சரிக்கை!

அரசு துறைகளில் நிரந்தரப் பணியாளர்களை நியமிப்பதற்குப் பதிலாக ஒப்பந்த முறையில் பணி நியமனம் செய்வதா?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக்.31-

தமிழ்நாட்டில் நூறு ஆண்டுகால திராவிட இயக்கத்தின் உழைப்பால், போராட்டத்தால், முயற்சியால் கல்வி நீரோடை பெருகி, இன்று கல்லூரி செல்லாதவர்கள் குடும்பம் இல்லை என்னும் இலக்கை நோக்கிய பாதையில் விரைந்து கொண்டிருக்கிறோம். கற்றவர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டியது அரசின் கடமையாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அதற்காகத் தான் பல துறை சார்ந்த தொழில்களையும் ஊக்குவிக்கிறோம். அதன் மூலம் வேலைவாய்ப்பைப் பெருக்குகிறோம். நமது செல்வமான மனிதவளத்தைத் திறனுடையவர்களாக உருவாக்கி, பிற நாடுகளிலும் சென்று பணியாற்றத்தக்க வகையில் தகுதிப் படுத்துகிறோம். நூற்றாண்டு 'திராவிட மாடல்' அரசுகளின் வெற்றி இது தான்.

அதே நேரத்தில், அரசு சார்ந்த துறைகளுக்குத் தேவையான ஊழியர்களை முறைப்படி தேர்ந்தெடுக்க அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கி வழிகாட்டியது நீதிக்கட்சி அரசு. (பனகால் அரசர் என்ற ராமராய நிங்கர் சென்னை மாநில பிரதமர் - ஆண்டு 1924) அதனை முறைப்படுத்தி, 69 சதவிகித இடஒதுக்கீட்டின் மூலம் அனைத்து சமூகத்த வரையும் அதிகாரத் தளத்திற்குக் கொண்டு வந்து, ஆட்சியில் அதிகாரத்தில் பங்கேற்கச் செய்திருப்பது தமிழ்நாட்டின், திராவிட இயக்கத்தின் தனிப்பெரும் சாதனையாகும்.

கடந்த தி.மு.க. ஆட்சியின் சாதனை!

கடும் நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலும், அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை வழங்க, தொடர் முயற்சி எடுத்து, 21 ஆண்டுகளுக்கு முன்பு பறிக்கப்பட்ட ஓய்வூதியப் பலன்களை மீண்டும் பெறுவதற்கான புதிய வழிவகையினையும் கடந்த தி.மு.க. ஆட்சி செய்தது. தற்காலிகத் தேவைக்காகப் பணியாளர்களை நியமித்துக் கொண்டாலும், நிரந்தரப் பணியாளர்களை நியமிப்பதற்கான முயற்சிகளை ஒன்றிய அரசு கொடுத்த நிதி நெருக்கடிகளுக்கு இடையிலும், திட்டமிட்டு படிப்படியாக நிறைவேற்றி வந்தது கடந்த தி.மு.க. அரசு.

ஆனாலும், எல்லா துறையிலும் நிரந்தரப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எல்லா தரப்பிலும் இருந்து வந்து, அதுவே ஆங்காங்கு போராட்டமாகவும் நடந்து வந்தது. இந்தப் போராட்டங்களை அரசு நடத்துவோர் அக்கறையுடன் கவனித்துத் தீர்வுகளை வழங்கி வந்த வேளையில், இதனை அரசியல் பிரச்சினையாக ஆக்கி, அதன் மூலம் பலன் பெறலாம் என்ற நோக்கில் எதிர்க்கட்சிகளாக இருந்தோர் செயல்பட்டு வந்தனர். அதில், 'தற்காலிகப் பணியாளர்களையெல்லாம் நிரந்தரமாக்குவோம்' என்று உறுதிமொழி வழங்கிய தற்போதைய ஆளுங்கட்சியான த.வெ.க.வும் அடக்கம்.



ஆட்சிக்கு வருமுன்னரும் – தேர்தல் அறிக்கையிலும் கூறியது என்ன?

சாத்தியக் கூறுகள் என்ன, சட்டம் என்ன, முறைப்படி நிரந்தரப் பணியாளர்கள் ஆக்குவதற்கான வாய்ப்பு என்ன என்பதையெல்லாம் அறியாமல், ஆட்சிக்கு வரும் முன்னர் எதையும் பேசலாம் என்ற நோக்கில் உறுதிமொழிகளை அள்ளி வழங்கினர். அதை நம்பி வாக்களித்தவர்கள், தங்கள் நம்பிக்கை பொய்த்ததால், போராட்டத்தை நடத்துகின்றனர். அவர்களை ஒடுக்கும் வேலைகளில் இந்த அரசு ஈடுபடுகிறது.

ஆனால், அதை விட அதிர்ச்சி தரும் வகையில், தற்போது, வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (OMCL) வழியாக அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு ஒப்பந்த முறையில் பணியாளர்களை நியமிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழ்நாடு அரசு சொல்லவருவது என்ன? டி.என்.பி.எஸ்.சி. மூலம் நிரந்தரப் பணியாளர்களை எடுப்பதற்குப் பதிலாக ஒப்பந்த முறையில் பணியாளர்களை நியமிப்பதையே தொடரப் போகிறார்களா? ஒவ்வோராண்டும் கல்லூரிப் படிப்பை முடித்து அரசு வேலை பெற வேண்டும் என்னும் நோக்கில், தங்கள் இளமைக் காலத்தைப் பலிகொடுத்துப் படித்து வருபவர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருக்கும் நிலையில், அவர்களின் கனவுகள் அனைத்தையும் சிதைக்கும் வேலையா இது?

ஒப்பந்தப் பணியாளர்கள் நியமனம் நிரந்தரத் தீர்வாகுமா?

அரசுப் பணிகளுக்கான தேர்வுகளுக்குத் தயாராவோரைத் திறனுடையவர்களாகத் தயாரிக்க 'நான் முதல்வன்', 'முதல்வர் படைப்பகம்' உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களின் திறன்களை வளர்த்தது கடந்த 'திராவிட மாடல்' அரசு. ஆனால், அவற்றின் முக்கியத்துவத்தைப் படிப்படியாகக் குறைக்கச் செய்து, அந்தத் திட்டங்களில் குளறுபடிகளை உருவாக்கி, கடந்த அய்ந்து மாதங்களாக இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை இந்த அரசு தோற்றுவித்திருக்கும் சூழலில், ஒ.எம்.சி.எல். மூலமாக ஒப்பந்தப் பணியாளர்களை நியமிப்பதையே நிரந்தரத் தீர்வாக்குவது போல இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நிரந்தரப் பணி அல்லாமல், ஒப்பந்த முறையில் பணிகளை வழங்குவதில் சமூகநீதி பாதிக்கப்படும்; இளைஞர்களின் கனவு சிதையும். அரசுக்கும் முழுமையான தகுதி படைத்த, நெடுங்காலம் பணியாற்றத்தக்க பணியாளர்கள் கிடைக்க மாட்டார்கள். நிர்வாகமும் சீர்குலையும். ஆளுமை மிக்க அரசுக்கு, அரசு ஊழியர்களின் பங்களிப்பு அவசியமானது. அந்தக் கட்டமைப்பு தான், ஆட்சிகள் மாறினாலும் அரசு இயந்திரத்தை ஓரளவேனும் ஓட்டிக் கொண்டிருக்கிறது. அதில் கைவைப்பது - அச்சாணியை உருவுவதைப் போல!

ஏற்கெனவே, போக்குவரத்துத் துறையில் 12,000 பேரைத் தேர்ந்தெடுக்க வடநாட்டு நிறுவனத்துக்கு வாய்ப்பளித்தது இந்த அரசு, மின் துறையில் தற்காலப் பணியாளர்களை நியமிக்க முயன்று எதிர்ப்பைச் சந்தித்தது. இப்போது இதையே தொடர்வதென முடிவெடுத்துவிட்டதா?

இளைஞர்களின் மத்தியில் போராட்ட உணர்வைத் தூண்டும்!

இளைஞர்களின் கனவைச் சிதைத்துவிட்டு, அவர்களின் ஆளுமையை அழித்துவிட்டு, தலைமுறையையே வீணடிக்க முடியாது, கூடாது! உடனடியாக, அரசு இத்தகைய முயற்சிகளை விடுத்து, அரசுப் பணிகள், பேராசிரியர்கள், ஆசிரியர் பணியிடங்கள், மருத்துவப் பணியாளர்கள் என அனைத்துத் துறைகளுக்கும் நிரந்தரப் பணியிடங்களை டி.என்.பி.எஸ்.சி-யின் மூலமும், பிற உரிய தேர்வாணையங்களின் மூலமும் நிரப்ப வேண்டும்.

இல்லையென்றால், இளைஞர்கள் மத்தியில் போராட்ட உணர்வே தலைதூக்கும், எச்சரிக்கை!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

கழக மறுசீரமைப்புப் பணிகள் குறித்து திருவள்ளூரில் ஆய்வுக் கூட்டம்!

மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தலைமையில் நடைபெற்றது! அன்னியூர் சிவா, ப.அப்துல்மாலிக் பங்கேற்பு!

திருவள்ளூர், அக். 31

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஒன்றியங்களில் கழக மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்வது தொடர்பான ஆய்வுக் கூட்டம், மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தலைமையில் திருவள்ளூரில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைக்கழகப் பிரதிநிதிகள் அன்னியூர் சிவா, ப.அப்துல் மாலிக் ஆகியோர் பங்கேற்று, ஒன்றியக் கழக நிர்வாகிகளுடன் கழக மறுசீரமைப்புப் பணிகள் குறித்து விரிவான ஆலோசனை மேற்கொண்டனர்.

ஒன்றியங்களில் கழக அமைப்புகளை மேலும் வலுப்படுத்துவது, கிளைக் கழகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துவது, கட்சியின் அடிமட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக, ஒவ்வொரு கிளைக் கழகத்திலும் கழகப் பணிகள் முறையாக நடைபெறுவதை உறுதி செய்வது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், ஒன்றியக் கழக நிர்வாகிகளின் செயல்பாடுகள், கட்சிப் பணிகளில் அவர்களின் பங்களிப்பு, பொதுமக்களிடம் கழகத்தின் செயல்பாடுகளைக் கொண்டு சேர்ப்பது, புதிய உறுப்பினர்களை இணைப்பது உள்ளிட்ட பணிகளை ஆய்வு செய்து, எதிர்காலத்தில் கழகத்தை மேலும் வலிமைப்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ. ஆதிசேசன், குருதாஸ், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, சி.சு. ரவிச்சந்திரன், கூளூர் எம்.ராஜேந்திரன், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், எஸ். மகாலிங்கம், டி.மோதிலால், பிரகாஷ் ஞான ஒளி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

த.வெ.க. அரசைக் கண்டித்து

சென்னை தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் நிஷா சையத் அறிக்கை!

சென்னை, அக்.31-

த.வெ.க. அரசை கண்டித்து சென்னை தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் நிஷா சையத் கூறியுள்ளார்.

இது குறித்து மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் நிஷா சையத் அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பாக த.வெ.க. அரசின் கொலை, கொள்ளை, சிறுமிகள் பாலியல் பலாத்காரம், கற்பழிப்பு, விலைவாசி உயர்வு ஆகியவைகளை கண்டித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தல் படி மாநில இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர்உதயநிதிஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழகத் துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களின் ஆலோசனைப்படி சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் ஆணைக்கிணங்க இன்று (31.10.2026) காலை 10 மணி அளவில் சுவாமி சிவானந்தம் சாலையில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக மகளிர் தொண்டர் அணி, மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன் .

இவ்வாறு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் நிஷா சையத் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றியங்களில் கழக மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தலைமையில் திருவள்ளூரில் நடைபெற்றது. இதில். தலைமை கழக பிரதிநிதிகள் அன்னியூர் சிவா, ப.அப்துல் மாலிக் ஆகியோர் பங்கேற்று ஒன்றியங்களில் கழக அமைப்புகளை வலுப்படுத்துதல், கிளைக் கழகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துதல், நிர்வாகிகளின் பணிகளை ஆய்வு செய்தல் உள்ளிட்ட மறுசீரமைப்புப் பணிகள் குறித்து ஒன்றியக் கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டனர். உடன் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(29.10.2026)



1. சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே ஓய்வு பெற்ற விடுதி வார்டன் தனியாக இருந்தபோது கழுத்தை அறுத்து கொலை செய்து 8 சவரன் நகை கொள்ளை .

2. தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே காதல் விவகாரத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த தந்தை வீடு புகுந்து சரமாரியாக வெட்டி கொலை.

3. நெல்லை தச்சநல்லூர் வாலாஜாபேட்டை அருகே பிறந்த பச்சிளம் ஆண் குழந்தையை கொலை செய்து . பிணம் சாக்கடையில் வீச்சு. பரபரப்பு .



4. தர்மபுரி மாவட்டம் பனந்தோப்பு அருகே புகாரின் பேரில் பெண்ணை அழைத்து, அசிங்கமாக திட்டி, தாலி செயினை அவிழ்த்து துன்புறுத்திய இன்ஸ்பெக்டர், அவமானப்பட்டதால் விஷம் குடித்த பெண் .

5. சென்னை அடுத்த அம்பத்தூரில் ஏழு வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வடமாநில ஆசாமி சிக்கினான்.

6. கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே கழுவன்திட்டை பகுதியில் 17 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி சில்மிஷம் செய்து வீட்டிலிருந்து 145 பவுன் நகையை அபேஸ் செய்த வாலிபர் .



7. தஞ்சாவூர் அருகே மடிகையில் 17 வயது இளம் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த கூலித் தொழிலாளி சிக்கினார் .

8. சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள தனியார் கல்லூரியில் மாணவர்களுக்குள் அடிதடி. உருட்டு கட்டைகளால் தாக்கிக் கொண்டதால் பரபரப்பு .

9. சென்னை ஆதம்பாக்கத்தில் தனியார் பள்ளி விடுதியில் தங்கி படிக்கும் பிளஸ் ஒன் மாணவியை உடல் ரீதியாக துன்புறுத்திய இரண்டு பெண் வார்டன்கள் சிக்கினர்.

10. ஊழலற்ற ஆட்சி என்ற முழக்கம் கேலிக்கூத்தானது. கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் பணிகளுக்கு த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் 20 சதவீத கமிஷன் கேட்பதாக ஒப்பந்ததாரர்கள் புகார் .

11. சென்னை தங்க சாலையில் இருந்து செங்குன்றம் செல்லும் மாநகரப் பேருந்தை வியாசர்பாடி மார்க்கெட் அருகே வழிமறித்து பேருந்து ஓட்டுநரை சரமாரியாக தாக்கிய ஆட்டோ ஓட்டுனர் சிக்கினார் .

முன்னாள் பொதுக்குழு உறுப்பினர்

கண்டோன்மெண்ட் நந்தகுமார் துணைவியார் என்.சுஜாதா அம்மாள் மறைவு!

மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கழகத்தினர் நேரில் அஞ்சலி!

காஞ்சிபுரம், அக். 31- காஞ்சிபுரம் மாவட்டம் முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் டி.நந்தகுமார் அவர்களின் துணைவியார் என்.சுஜாதா அம்மாள் (வயது 65) அவர்களின் மறைவுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதிய லிங்கம், மாவட்டதுணைச் செயலாளர்இ.கருணாநிதி, தாம்பரம் மாநகர துணை மேயர் கோ.காமராஜ், பகுதி கழகச் செயலாளர்கள் வே.கருணாநிதி, இ. ஜோசப் அண்ணாதுரை, கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி.பாபு, கண்டோன்மெண்ட் வட்டச் செயலாளர்கள் என். வி.விஜயசங்கர், மாறன், ஸ்டீபன், செட்ரிக் ஜான், வேலு, கவிசக்கரவர்த்தி, மவுண்ட் ராமு, கண்டோன்மெண்ட் நகர மாணவர் அணி அமைப்பாளர் எம்.பி.மகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குன்றத்தூர் தி.ந. சம்பந்தம்

அக்டோபர் 31 (1977)



செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது அன்பை பெற்றவர்.

இறுதிமூச்சுவரை கழகப் பணியாற்றிய பகுத்தறிவுப் பண்பாளர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.